**3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான விடயங்கள்**

செயற்திட்டமானது மக்னரிங் றீசன்ஸ் இமாஜிங் ஸ்கானர் (எம்ஆர்ஐ), சிங்கிள் புறோரோன் எமிசன் கொம்பியுரேட் ரோமோ கிரபி ஸ்கான்னர் (எம்பிஈசீரி), பொய்ஸ்ரன் எமிசன் கொம்பியூகேட் ரோமகிரபி ஸ்கானர் (பிஈரி) மற்றும் டிஜிட்டல் கம்ஸ்றகன் அன்ஜிகிரோமி முறைமை (டீஎஸ்ஏ) போன்ற டயனோஸ்ரிக் மருத்துவ இமாஜிங் உபகரணத்தை ரூபா 723.77 மில்லியன் கிரயத்தில் சர்வதேச போட்டி விலைமனுவினூடாக கொள்வனவு செய்திருந்தது. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விலைமனுவிடல் கட்டத்திலிருந்து செல்லுபடியாகவுள்ள யூஎஸ் பூட் மற்றும் மருந்து நிர்வாகம் (யூ.எஸ் எப்டீஏ) போன்றவற்றால் வழங்கப்பட்ட தெரிவுச் சான்றிதழானது மக்னரிங் றீசன்ஸ் இமாஜிங் ஸ்கானர் மற்றும் பொய்ஸ்ரன் எமிசன் ரோமகிறவி ஸ்கானரின் தொழில்நுட்ப விதப்புரையின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட நிபந்தனை தேவைப்பாட்டின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2010 இற்கு பின்னர் முதலில் அறிமுகப்படுத்தப்பட வேண்டியிருந்த உபகரணத்தின் மாதிரிக்கு தேவைப்பாட்டிருந்த போதிலும் எம்ஆர்ஐ, எஸ்பிஈசீரீ மற்றும் பெற் ஸ்கானர்களிற்கான மாதிரி ஆண்டானது தெரிவு செய்யப்பட்ட வழங்குனர்களால் சமர்ப்பிக்கப்பட்ட விலைமனு ஆவணங்களின் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. எனினும், அமைச்சரவையால் அனுமதிக்கப்பட்ட பெறுகைக் குழுவிற்கு உதவி செய்வதற்கு நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவானது அத்தகைய இக்கட்டான தேவைப்பாடுகளின் கருத்திற்கொள்ளாமல் அத்தகைய விலைமனுக்களை பிரேரித்தது.

(இ) ஸ்பெக்ற் ஸ்கானரிற்கான தொழில்நுட்ப விதப்புரைகளானது விலைமனு கோரல் கட்டங்களில் தீர்மானிக்கப்பட்டிருக்காததுடன் ஸ்கானர் இயந்திரத்திற்கான புதிய மாதிரியானது விலைமனு மூடப்பட்ட நேரத்தில் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்படாத தெரிவுசெய்யப்பட்ட வழங்குனர்களால் கோரப்பட்டிருந்தது. தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவானது அத்தகைய இயந்திரத்தை வழங்குனர்களின் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்ட விபரங்களை அடிப்படையாகக் கொண்டு அத்தகைய இயந்திரத்தை மதிப்பீடு செய்திருந்தது.

(ஈ) இடைநிறுத்தப்படாத வலு முறைமையின் அலகுகளை உள்ளடக்குகின்ற கட்டாய பகுதிப் பிரிவுகள் மூல விலை மனு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருக்காமையால் ரூபா 4.98 மில்லியன் தொகையான மேலதிக கொடுப்பனவொன்றில் அதே வழங்குனர்களிடமிருந்து பெற் மற்றும் டீஎஸ்ஏ இயந்திரங்களிற்காக 02 இடைநிறுத்தப்படாத வலு முறைமைகள் செயற்திட்டம் கொள்வனவு செய்தது.

(உ) மருத்துவ இமாஜிங் உபகரணத்தின் வழங்குனர்களால் வழங்குவதற்கு இணங்கப்பட்ட வைத்தியசாலைகளின் உரிய உத்தியோகத்தர்களுக்குரிய உள்ளக மற்றும் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் 2018 ஆகஸ்ட் 01 வரை பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) எம்ஆர்ஐ இயந்திரம் தவிர்ந்த அனைத்து மருத்துவ உபகரணங்களும் கட்டாய உதிரிப்பாகங்கள் இன்மையாலும் பெற் ஸ்கானரின் பயன்பாட்டிற்காக ''றேடியோக்ரிவ் பிளிடிஓஎக்ஸி குளுக்கோஸ்'' என்ற அத்தியாவசிய இரசாயனத்தின் இறக்குமதியிலுள்ள காலதாமதங்களாலும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 06 மாதங்களிற்கு மேல் விளைவற்றிருந்தது.

(எ) வழங்குனர்களுடன் இணங்கப்பட்ட மற்றும் பிரமாணங்கள் மற்றும் நிபந்தனைகளிற்கிணங்க, ஸ்கானிங் நடவடிக்கைகளை தொடங்காமல் டயக்னஸ்ரிக் மருத்துவ இமாஜிங் உபகரணத்தின் பொருத்தல் திகதியிலிருந்து 36 மாதங்கள்

